1989 மே 6]

மின்வாரியக் கட்டணப் பட்டியல்

208—(*வினா எண் 858) திரு. உ. ரா. வரதராசன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியக் கட்டணப் பட்டியலை இரு மாதத்திற்கு ஒரு முறை அனுப்புவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மாதந்தோறும் மின் கட்டணப் பட்டியல் அனுப்பி கட்டணத்தைச் செலுத்துவதை எளிதாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, (அ) மின் வாரியம் கட்டணப் பட்டியலை இரு மாதத்திற்கு ஒரு முறை அனுப்பும் திட்டம் திருப்திகரமான முறையில் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

(ஆ) மாதந்தோறும் மின் கட்டணப் பட்டியல் அனுப்பும் எண்ணம் எதுவுமில்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணப் பட்டியலை அனுப்புவது ஒரு வேளை மின்வாரியத்திற்கு வேண்டுமானால் திருப்திகரமாக இருக்கலாமே தவிர, பணம் கட்டுகின்றவர்களுக்கு அது மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றது. இரு மாதங்களுக்கு ஒருமுறைசேர்த்து வருகின்ற போது அதைச் சேர்த்துக் கட்டுவதற்கான பிரச்சினைகள் பல எழுகின்ற காரணத்தினால் மின் உபயோகிப்பாளர்கள் நலனைக் கருதி முன்பிருந்ததுபோல் மாதம் தோறும் பட்டியலை அனுப்புவதற்கு, இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதும் 54 லட்சம் பயனீட்டாளர்கள் இருப்பதோடு, வருடத்திற்கு 3 லட்சம் பயனீட்டாளர்கள் அதிகமாக ஆகின்ற காரணத்தினால் வேலைப் பளு, ஆட்களைச் சேர்ப்பது இது போல மின் வாரியத்திற்கு அதிகச் செலவு ஏற்படுகின்ற காரணத்தினால், இருக்கின்ற தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒத்துக்கொண்டு இந்த முறை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறை பட்டியல் அனுப்புகின்ற முறை வைக்க இந்த அரசுக்கு எண்ணம் இல்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணப் பட்டியல் அனுப்புவதற்கு, இருக்கின்ற தொழிற் சங்கங்கள் எல்லாம் ஒத்துக் கொண்டு இந்த முறை அமுலிலே இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவலின்படி சில சங்கங்கள் ஒரு வேளை ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனாலுங்கூட மின்வாரிய ஊழியர்களை, பெரும்பான்மையான ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய சங்கங்கள் இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த எதிர்ப்பைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. பயனீட்டாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு மீண்டும் மறு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அளித்த விவரத்தில் எனக்குத் தெரிந்தவரையில் அனைத்துச் சங்கங்களும் ஒத்துக் கொண்டதாகத்தான் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது கருத்தில் கொள்ளப்படும். அதே நேரத்தில் அகில இந்திய அளவில், அனைத்து மாநிலங்களிலும் இரு மாதத்திற்கு ஒரு முறைதான் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, செலவினங்கள் அதிகப்படும் என்ற காரணத்தினால் ஒரு மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் செலுத்த வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த இரு மாதங்களுக்கு ஒரு முறை வசூல் செய்யும் பட்டியலை எத்தனை தொழிற்சங்கங்கள் ஒப்புக் கொண்டன? எத்தனை தொழிற்சங்கங்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை? மின்சாரத்தை உபயோகிப்போர் சங்கம் அதை அனுமதித்ததா, ஒப்புக் கொண்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வியாகத் தொடுத்தால் அதனுடைய விளக்கம் தரப்படும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கும்படியான ஒரு விவரம் தவறான விவரம். 2 மாதத்திற்கு ஒரு தரம் பில் கொடுக்கும்படியான இந்த ஏற்பாடு உண்மையில் ஆள் குறைப்பு செய்வதற்காகக் கொண்டு வந்த திட்டம். ஆனால் மின் இணைப்புகள் அதிகமாகி வருமானம் பெருகியது. அப்போது அதிக ஆட்

1989 மே 6]

களை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதனாலே இந்தத் திட்டம் வந்தது. இது பயனீட்டாளர்களைக் கடுமையாகப் பாதித்து விடுகிறது. ஏழைக் குடும்பங்களும், அரசு ஊழியர்களும் மாதா மாதம் கட்டுவதற்கு விரும்புகிறார்கள். இரண்டு மாதம் போட்டு வைத்தால், அவர்களுக்குக் கட்ட முடியவில்லை. எனவே லைன்னக் கட் பண்ணும் அபாயம் ஏற்படுகிறது. இதை மாதாந்திரக் கட்டணமாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். எங்களுடைய சங்கம் இதை ஒத்துக்கொள்ளவில்லை என்பதற்கு ஆதாரம் கொடுக்கத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவரவர்களே, மின் பயனீட்டாளர்கள் வருஷத்திற்கு 3 லட்சம் பேர் அதிகப்படும்போது, சிறிய வீடுகள், விவசாயிகளுக்குக் கொடுக்கும் மின் இணைப்பினால், ஒரு யூனிட்டுக்கு அரசாங்கத்திற்கு 40 காசு இழப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் பயனீட்டாளர்கள் அதிகரிக்க, அதிகரிக்க லாபம் வருமென்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். பயனீட்டாளர்கள் அதிகரிக்க அதிகரிக்க நஷ்டம் தான் வரும். இருந்தும் உறுப்பினர் அவர்கள் கருத்து கவனிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய திண்டிவனம் பகுதியில் 'மியர் சர்வீஸ்' என்ற அடிப்படையில் 100 அடிகளுக்குள் இடைவெளியுள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்து, அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று நூற்றுக்கணக்கான மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. விவசாயிகள் நலன் கருதி துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு மீண்டும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அறையிலே சந்தித்து இது பற்றிக் கேட்டதால் நானும் மேல் அதிகாரிகளைச் சந்தித்து, மீண்டும் மின் இணைப்பு தர வேண்டுமென்று உத்தரவிடப் பட்டிருக்கிறது. வெகு விரைவில் மின் இணைப்புத் தரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது 2 மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணம் வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். தமிழக அரசு இந்த ஆண்டு மின் கட்டணத்தை யூனிட்டுக்கு 20 காசு உயர்த்தியுள்ளது. என்னுடைய பகுதியில் விசைத் தறியாளர்கள் அதிகமாக உள்ளார்கள். அவர்களிடமிருந்து 2 மாதங்களுக்கு ஒரு முறை மின்

கட்டணம் வசூலிப்பதால் 2 மாதங்களுக்கு ஒரு முறை யூனிட் கணக்கு எடுக்கிறார்கள். அதன் காரணமாக ஏப்ரலில் கணக்கெடுக்கும்போது மின்விசைத் தறியாளர்களிடமிருந்து மார்ச்சில் அவர்கள் உபயோகித்த மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 20 பைசா உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. இதனால் ஏறத்தாழ ஒவ்வொருவரும் 300, 500 ரூபாய் அதிகம் கட்டும் சூழ்நிலை ஏற்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இதை ஏப்ரல் மாதம் முதற்கொண்டு வசூல் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது மின் கட்டணம் உயர்த்தியிருப்பது தொழிலாளர்களுக்கு மட்டும்தான். மற்றவர்களுக்கு இல்லை. மாதாமாதம் வசூல் செய்யக்கூடிய எண்ணம் இது வரை அரசுக்கு இல்லை. உறுப்பினர்கள் அனைவரும் இதை விரும்புவதால் இது கவனிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, நான் சென்ற முறை கேட்ட கேள்வி, ஏழை விவசாயிகள் கிணற்றிலே நீர் இல்லாமலேயே வருஷக் கணக்கில் பணம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்று இருப்பதை மாற்றி, விவசாயத்திற்காகப் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு மட்டும் கட்டணம் வசூலிக்க திட்டம் அரசிடம் உண்டா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவரவர்களே, அது போல குறிப்பு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

முன்னாள் அமைச்சர்களின் தொலைபேசிக் கட்டண பாக்கி

வினா 15—திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் அமைச்சர்கள் மாநில அரசுக்கு வைத்துள்ள தொலைபேசிக் கட்டண பாக்கித் தொகை எவ்வளவு?

(ஆ) அதை வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?